# 4

# கலை - பண்பாடு - கலப்புத்தன்மை[1] (Hybridity) ஓர் பிராரம்ப உசாவல்

வடிவேல் இன்பமோகன்

கலையின் மூலம் ஒன்றைப் படைப்பதும் அதனூடாக அக்காலத்தை பற்றிய விளக்கத்தை நோக்கி நகர்த்துவதும் அடிப்படை யானது. இதன் மூலம் பண்பாட்டு ரீதியான விளக்கத்தை பெற்றுக் கொள்வது நோக்கமாகும்.

சுவைத்தலை நோக்காகக் கொண்டு படைக்கப்படும் கலை இருவிதமான ஆற்றலைக் கொண்டது. ஒன்று அக்காலத்தைப் பதிவுசெய்வது, மற்றையது உலகளாவிய மனிதப்பெறுமானத்தை வெளிப்படுத்துவது. இவை பல்வேறுவிதமான மூலங்களுடன் தொடர்புபட்டனவாகக் காணப்படும். அவை தனிமனித மற்றும் குழுவினரின் அடையாளங்கள், ஒழுக்கம், சமயம், அரசியல் ஒழுங்கு முறைகள், பாலியல் ரீதியான அனுபவம், பால்நிலை மற்றும் அழகியல் பெறுமானம் என்பனவாகும். கலையின் மூலம் ஒன்றைப் படைப்பதும் அதனூடாக அக்காலத்தை பற்றிய விளக்கத்தை நோக்கி நகர்த்துவதும் அடிப்படையானது. இதன் மூலம் பண்பாட்டு ரீதியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது நோக்கமாகும். நாங்கள் கலையை சர்வதேச ரீதியான மனிதப் பெறுமானத்தை வெளிப் படுத்துவதாகக் கருதி அதற்கு மதிப்பளிக்கின்றோம். கலை உலகப் (Universal) பொதுமையயானதாக விளங்குவதால் எந்தவொரு குறிப்பான இடத்திலும் கட்டி வைக்கப்படக்கூடியதல்ல.

பண்பாடு பற்றிய ஆய்வில் பண்பாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு விளக்கங்களினுள் இரண்டு விளக்கங்கள் முக்கியமானவை. அதில் ஒன்று பண்பாடு என்னும் பதத்திற்கான மானிடவியல் அர்த்தம். அது ஒத்த பண்புகளைக் கொண்ட மக்கள் குழுவினரைக் குறிக்கும். இது சில வேளையில் புவியியலுடன் நெருக்கிய தொடர்புடைய தன்மை, பங்கீடு செய்யப்படும் மொழி, அறிவாற்றல், கலைத்துவ மரபு, அரசு, சமயம், பொருளாதாரம், அரசியல் முறைமை போன்ற வற்றை உள்ளடக்கியிருக்கும் (Leuthold, Steven, M., 2011:10). பண்பாடு குறிப்பிடும் உலகப்பார்வை, வாழ்க்கைப் பழக்கவழக்கங்கள் என்பன ஒரு மக்கள் குழுவினரை மற்றைய மக்கள் குழுவினரில் இருந்து வேறுபடுத்துகின்றது. பண்பாட்டினுடைய வேறுபாட்டை உருவாக்குகின்ற

1. Hybrid என்னும் சொல்லுக்கான தமிழ் பதமாக கலப்பு என்பதும், Hybriditation என்னும் சொல்லுக்கு கலப்பாக்கம் என்பதும், Hybridity என்னும் சொல்லுக்கு கலப்புத்தன்மை என்பதும் இவ்வாய்வில் பயன்படுத்தப் படுகின்றது.

செயற்பாடுகளில் ஒரு சிலவற்றை கலையும் மேற்கொள்கின்றது. பண்பாடு பற்றிய அறிவு கலையை மேலும் முழுமையாகப் புரிந்துகொள்ள உதவும்.

மானிடவியல் சார்ந்த சட்டத்தினுள் நின்று நோக்கும் போது, பண்பாடு என்பது ஒரு கருத்துரு வாக்கமாகும்.

இந்த மானிடவியல்சார்ந்த சட்டத்தினுள் நின்று நோக்கும் போது, பண்பாடு என்பது ஒரு கருத்துருவாக்கமாகும். அக் கருத்துருவாக்கம் பல்வேறு மட்டங்களில் அணுகப்படுகின்றது. மக்கள் பெரியளவிலான புவியியல் பிராந்தியங்களுடன் பண்பாட்டு ரீதியாக இணைக்கப் பட்டுள்ளனர். அவற்றை கீழைத் தெற்காசியா, தென்கிழக்காசியா, மேற்கு ஆபிரிக்கா, தென்னாபிரிக்கா, மேற்கு ஐரோப்பா என வரையறுத்துக் கொண்டு செல்லலாம். இவை உறுதிப்படுத்தப்பட்ட பண்பாட்டுப் பிரதேசங்களாக எம்மால் அடையாளப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஏனென்றால் இப்பிரதேசங்களில் புவியியல் ரீதியான நெருங்கிய பண்பாட்டுத் தொடர்பின் தன்மையை அவர்கள் பங்கீடு செய்யும் மொழி, ஒற்றுமையான உலக நோக்கு, பொதுவான வர்த்தக வலைப்பின்னல் என்பனவற்றால் காணமுடிகின்றது. அவ்வாறு இருந்தும் பண்பாடானது பல்வேறு படிநிலைகளில் புரிந்துகொள்ளக்கூடியது. இந்தப்படிநிலைகளுக்கு பெறுமானமோ அல்லது நிலையோ வரையறுக்கப்படுவதில்லை. பண்பாட்டில் ஒன்றைவிட இன்னொன்று உயர்ந்ததென்று உணரமுடியாது. மானிடவியல் சார்ந்த பண்பாட்டு ரீதியான புரிதல் இங்கு அடிப்படை யானது. இவ்விளக்கங்கள் பண்பாட்டுப் பொதுமை, பண்பாட்டுத் தனித்துவம் பற்றிய தெளிவை வழங்குகின்றன.

வேறுபட்ட சமூகக் குழுக்களின் கலை வெளிப்பாடு பண்பாட்டு வேறுபாட்டை அறிந்து கொள்வதற்கான ஒரு வழியாகக் கொள்ளப் படக்கூடியது.

சமகாலத்தில் கலை வரலாறு போலவே பண்பாடு, பண்பாட்டின் பகுப்பாய்வு தொடர்பான புரிந்துகொள்ளலும் ஒரு துறையாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. வேறுபட்ட சமூகக் குழுக்களின் கலை வெளிப்பாடு பண்பாட்டு வேறுபாட்டை அறிந்து கொள்வதற்கான ஒரு வழியாகக் கொள்ளப்படக்கூடியது. இருந்தும் ஒரு சமூகத்தின் பண்பாட்டு வெளிப்பாடு இன்னொரு சமூகத்தின் பண்பாட்டு வெளிப்பாட்டைவிட சிறந்தது என்பதை தீர்மானிப்பதற்கான ஒரு பெறுமானமாக இது அமையாது. பரந்தளவில் பண்பாட்டைப் பகுப்பாய்வு செய்யும் போது சமூகத்தில் இருப்பவரின் தனிப்பட்ட பண்பாட்டு நோக்கைக் கூர்ந்து பார்ப்பதும், வேறுபட்ட பண்பாடு களில் காணப்படும் உற்பத்திகளுக்கு சமவளவு முக்கியத்துவம் அல்லது பெறுமதி அளிப்பதும் காணப்படுகின்றது. இருந்தபோதிலும் இது ஒரு முறையாக அமைவதில்லை. கடந்தகாலங்களில் கலை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்ட சில கலைஞர்களுக்கும் பண்பாட்டிற்கும் குறித்த காலப்பகுதிக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளனர். ஒவ்வொருவரும் அவர்கள் தேர்ந்தெடுத்த விடயங் களில் பகுப்பாய்வு செய்துள்ளனர். வரலாற்றாசிரியர்கள் அவர்கள்

தேர்ந்தெடுத்த குறிப்பிட்ட முக்கியமான கலைஞர்கள், பண்பாடுகள், கலைகளில் இருந்து பெறுமதி மிக்க தீர்மானங்களை மேற் கொண்டுள்ளனர். குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கிய கலையை முக்கியத்துவப்படுத்திய இவ்வாறான நிலைமை பண்பாடு பற்றிய இரண்டாவது விளக்கத்தை நோக்கி எம்மை நகர்த்துகின்றது.

பண்பாடு பற்றிய இரண்டாவது விளக்கம் பண்பாடு என்பது பின்பற்றப்படுவது, பயன்படுவது, சுவைக்கப்படுவது, பெறுமதி மிக்க சமூகத்தை இணைப்பது (Leuthold, Steven, M., 2011:11) எனக் குறிப்பிடப்படுகின்றது. சில குறிப்பிட்ட குழுவினரால் மேற்கொள்ளப் படும் முக்கியமான நடவடிக்கைகளை பண்பாடு சுட்டிநிற்கின்றது. இவை ஏனையோராலும் பின்பற்றப்பட வேண்டியவையாகின்றன. சிலவேளைகளில் இந்த உள்ளாந்த இயல்பு வாய்ந்த பண்பாட்டுக் கூறுகள் மேற்கு நாடுகளில் காணப்படும் உயர் பண்பாட்டுடன் இணைக்கப்படுகின்றன. உயர் பண்பாடு (High culture) அவற்றின் கலைத்துவ உற்பத்திகளுக்கு பாரம்பரியமாக உயர் கலைத்துவ முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதை சுட்டிநிற்கின்றது. உயர் பண்பாட்டிற்கான மேலைத்தேசத்தில் காட்டக்கூடிய ஒரு உதாரண மாக லியனாடோ டாவின்சியின் ஓவியத்தைக் குறிப்பிடலாம். தமிழ்ப் பண்பாட்டில் பரதநாட்டியம், கருநாடக சங்கீதம் என்ப வற்றைச் சுட்டிக்காட்டலாம்.

நாங்கள் சில கலைகளை ஒரு இடத்தில் நிகழ்த்துகை செய்யும் போது அல்லது காட்சிப்படுத்தும் போது அக்கலை நிகழ்த்துகை மேற் கொள்ளப்படும் சமூகத்தின் அங்கீகாரத் துடனும் ஒத்துழைப் புடனுமே மேற்கொள் கின்றோம்.

இதுபோன்று சில சமகால கீழைத்தேச / மேலைத்தேசப் பழங் குடியினரின் பண்பாடுகள் குறிப்பான சில பாரம்பரிய பழக்க வழக்கங்களை விளக்குகின்றன. இலங்கையில் வேடர்களிடம் காணப்படும் இசை மரபு, கதை சொல்லுதல் மரபு, இனக்குழுச் சிற்பங்கள், சடங்காசார நிகழ்வுகள் குறிப்பாக சடங்குடன் இணைந்த அம்பு நடனம்[2] (The Arrow Dance) (Seligmann, C.G.,1911:212) என்பன இங்கு உதாரணங்களாக குறிப்பிடத்தக்கவை. இவை குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக அச்சமூகங்களினால் உணர்வு ரீதியாக பாதுகாக்கப்பட்டும் புதிதளிக்கப்பட்டும் வருகின்றன. இப்பின்னணியில் இந்த இரண்டாவது விளக்கத்தில் பண்பாடு என்பது ஒரு பெறுமானத்தை சுட்டுவதாகவே நாம் கருதவேண்டியுள்ளது. நாங்கள் சில கலைகளை ஒரு இடத்தில் நிகழ்த்துகை செய்யும் போது அல்லது காட்சிப்படுத்தும் போது அக்கலை நிகழ்த்துகை மேற் கொள்ளப்படும் சமூகத்தின் அங்கீகாரத்துடனும் ஒத்துழைப்புடனுமே மேற்கொள்கின்றோம். ஏனெனில், அது ஒரு பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்ட விடயமாகும். குறித்த சமூகங்களின் அங்கிகாரம் அங்கு கிடைக்காதபோது அக்கலை நிகழ்த்துகை அங்கு

2. அம்பை நடுவே நட்டு அதனைச் சுற்றி வேடர்களினால், குறிப்பாக ஆண்களினால் ஆடப்படும் ஒருவகை நடனம்.

சாத்தியமற்றதாகும். எல்லோரும் இவ்வாறான விடயங்களை அங்கிகரிக்கமாட்டார்கள் என்பதும் அங்கு வெளிப்படுகின்றது. இங்கு ஒரு எடுத்துக்காட்டினைக் குறிப்பிடுவதாயின், பாரம்பரிய விடயங்களில் கருத்தூன்றிய சமூகங்கள் பாரம்பரிய கூத்து நிகழ்த்துகையானது நவீன நாடகம் அல்லது சினிமாவைவிட சிறந்தது என உணரலாம். ஏனெனில், பண்பாட்டு வெளிப்பாடுசார்ந்த பெறுமதியான ஒரு தீர்மானத்தை அவர்கள் அங்கு மேற்கொள்வதே இதற்குக் காரணமாகும்.

கலைஞர்கள் ஏனைய பண்பாடுகளில் காணப்படும் கலைகளை அலசி ஆராய்ந்துள்ளனர். அவர்களின் ஆராய்ச்சி கணிப்பீடுகள் அவர்களின் சொந்த படைப்பாக்கச் செயற்தொடரினூடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் பண்பாட்டு இணைப்புத் தொடர்பான அவர்களின் நோக்குநிலையில் இருந்து உருப்பெறுகின்றது. ஒரு பண்பாட்டுடன் ஏனைய பண்பாட்டுக் கூறுகளை இணைக்க முற்படும்போது அது பண்பாட்டு இணைப் பிற்கு வழியமைத்து விடுகின்றது. கலை பற்றிய பண்பாட்டு இணைப்பிற்கான வரைவிலக்கணம் பின்வருமாறு:

"ஐரோப்பிய மற்றும் ஐரோப்பியர் அல்லாத கலைகளில் காணப்படுவதும் காணப்படாததுமான வேறுபாடுகளைச சூழ்ந்திருப்பதும் மற்றும் ஐரோப்பியக் கலைகளில் இருந்து வேறுபட்டுக் காணப்படுவதும் மற்றும் காலத்திற்கேற்ப மாற்றமடைவதுமான வேறுபாடுகளைக் கொண்டிருப்பதும் பண்பாட்டு இணைப்பு கலையின் பண்பாகும்" (Morphy, Howard., 2007: 03) எனக் குறிப்பிடுகின்றது. பண்பாட்டு இணைப்பை கலையாக்கத்தில் பிரதிபலிக்கும் கலைஞர் ஒருவரின் கலைப்படைப்பிற்கான உதாரணங்களில் ஒன்றாக கொலி வேர்ஜின் மேரி (Holy Virgin Mary) என்னும் ஓவியத்தைக் குறிப்பிடலாம். இது அவ்ரோ - பிரித்தானிய கலைஞர் (Afro-British Artis) கிறிஸ்ட் ஒவ்லி (Chris Ofili) அவர்களினால் 1996இல் வரையப்பட்டது.

கிறிஸ்ட் ஒவ்லி அவர்கள் தனது ஓவியம் பிரபல்யம் அடைவதற்காக ஒரு யானையின் மலத்தை அந்த வேர்ஜினின் மார்பகத்தில் ஓவியவாக்கத்தின் போது பயன்படுத்தியிருந்தார். இச்செயற்பாட்டின் ஊடாகப் பாலியல்ரீதியான ஒரு வாசிப்பை இந்த உருவத்தில் கொண்டுவந்திருந்தார். மதரீதியான குழுக்களின் கோபம் இந்தச் செயற்பாட்டின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் வேர்ஜின் ஓவியத்தின் படைப்பாக்கத்தில் ஒவ்லியால் கொண்டுவரப்பட்ட பாலியல் வெளிப்பாடு அந்த ஓவியத்தின் பெறுமானத்தை அதிகரிப் பதாகவும் இதுவே ஒவ்லியை ஊக்கு வித்ததாகவும் அமைந்திருந்தது.

ஓவியம் பிரபல்யம் அடைவதற்காக ஒரு யானையின் மலத்தை அந்த வேர்ஜினின் மார்பகத்தில் ஓவிய வாக்கத்தின் போது பயன்படுத்தி யிருந்தார். இச் செயற்பாட்டின் ஊடாகப் பாலியல் ரீதியான ஒரு வாசிப்பை இந்த உருவத்தில் கொண்டு வந்திருந்தார்.

ஒவ்லி பாலியல் விடயங்களை ஓவியத்தில் வெளிப்படையாக வெளிப்படுத்தியதை ஒரு அடையாளமாக சமகாலச் சமூகம் கருதியது.



(Chris Ofili, The Holy Virgin Mary, 1996, paper collage, oil paint, glitter, polyester resin, map pins & elephant dung on linen, 243.8 x 182.9cm Chris Ofili)[3]

பண்பாட்டுச் சார்புவாதக் கோட்பாட்டில் பண்பாட்டுக் இணைப்பின் மூலம் உருவாக்கப்படும் கலைப் பொருட்கள் பற்றிய கருத்து தலைகீழாக உள்ளது.

இதனை இழிநிலை ஓவியம் (Pornographic) என்று அழைத்தனர். எனினும் பாரம்பரிய கலைச் செயற்பாட்டாளர்களுக்கு எதிர்பார்க்கையற்ற ஒன்றாகவே இது காணப்பட்டது. சமகாலத்துக்குரிய இப்படைப்பில் ஐரோப்பிய/ஆபிரிக்க பண்பாட்டு வேறுபாட்டை வெளிப்படுத்தியிருந்தார். ஆபிரிக்கச் சமூகங்களில் புனிதமானதாகவும் ஐரோப்பிய சமூகங்களில் அசிங்கமானதாகவும் யானையினுடைய மலம் கருதப்படுகின்றது. இப்பண்பாட்டு வேறுபாட்டை அவரின் கொலி மேரி ஓவியத்தில் பிரயோகித்து வெளிப்படுத்தியதன் மூலம் இவ்விரு பண்பாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்படுமா? என்னும் வினா இங்கு எழுகின்றது.

இவ்விடத்தில் பண்பாடு பற்றிய மானிடவியல் புரிந்துகொள்ளல் எம்மை பண்பாட்டு சார்புவாதம் (Cultural Relativism) பற்றிய அறிகையை நோக்கிக் கொண்டு செல்கின்றது. பண்பாட்டு இணைப்பில் எல்லாச் சமூகங்களிலும் காணப்படும் நம்பிக்கை, அதன் அளவு என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு அவை எல்லாமே பெறுமானம் மிக்க உணர்வாக உருவாக்கி அவை பண்பாட்டின் ஒரு விடயமாக மாறுகின்றன என்பதைச் சுட்டுகிறது. பண்பாட்டுச் சார்புவாதக் கோட்பாட்டில் பண்பாட்டுக் இணைப்பின் மூலம் உருவாக்கப்படும் கலைப்பொருட்கள் பற்றிய கருத்து தலைகீழாக உள்ளது. இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால்

3. Source: https://www.khanacademy.org/humanities/global-culture/identity-body/identity-body-europe/a/chris-ofili-the-holy-virgin-mary

ஒரு குறிப்பிட்ட விடயத்திற்குள்ளேயே கலைகள் படைக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சார்புவாதக் கோட்பாடு ஏனைய பண்பாடு களின் வெளிப்பாடுகளை அவர்களின் விடயத்தின் ஊடாகப் புரிந்து கொள்ளும் ஒரு நிலையை உருவாக்குகின்றது. எப்படியிருந்தாலும் உச்சளவிலான கருத்தினைக் கொண்டதொரு விடயத்தை எடுத்துக் கொண்டால் அதன் தர்க்கரீதியான விளைவு சார்புடையதாக இருக்கும். அந்தக் குறிப்பிட்ட பண்பாட்டைச் சேர்ந்த உறுப்பினர்களால் மட்டுமே அந்த குறிப்பிட்ட பண்பாட்டில் காணப்படும் உற்பத்திகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பாக உண்மையான விளக்கத்தினையும் அல்லது தீர்மானத்தினையும் மேற்கொள்ளமுடியும்.

பண்பாட்டு இணைப்புப் பற்றிய நோக்கு கலை வெளிப்பாட்டை புரிந்துகொள்வதற்கு உதவுகின்றது. கலைத் தரத்தை பேணும் செயற் பாடுடன் தொடர்புடையதாக இவற்றினை வரையறுத்தல் மற்றும் செயல்முறைப்படுத்தல் என்பன விளங்குகின்றன. பண்பாட்டுச் சார்புவாதம் பற்றிய முற்கற்பித (Perspective) சிந்தனை கலையின் தரத்தினை பண்பாட்டு இணைப்புரீதியாக வரையறுத்து பிரயோகிக்கும் போது மிகுந்த பிரசசினைக்குரியதாக விளங்கு கின்றது. பண்பாட்டுடன் தொடர்புடைய கோட்பாடுகள், நிலையான தரம் என்பன உள்ளார்ந்த ரீதியான பண்பாட்டுச் செயற்பாடுகளின் மூலம் வரையறுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன. இதனை கலையாக்கத் தரத்தின் தீர்மானங்களை பரவலாக்குபவை எனக் குறிப்பிடுவர். இருந்த போதிலும் கலைக்காட்சிக் கூடங்களின் பொறுப்பாளர்கள் (Curators), கலைப் பொருட்களைச் சேகரிப்போர் (Collectors), எழுத்தாளர், கலையைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், கலைஞர்கள் என்போர் ஏனைய பண்பாடுகளில் உருவாக்கப்பட்ட கலை வேலைகளின் முக்கியத்துவம் தரம் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்பவர்களாக விளங்குகின்றனர். காட்சிப்படுத்தல், கலைப்பொருட் சேகரிப்பு, கலைத் திரட்டு, விரிவுரை வழங்கல் என்பவற்றின் போது எவற்றை உள்ளடக்க வேண்டும், எவற்றை உள்ளடக்கக்கூடாது என்பதைப் பற்றியதாக அவர்களின் தீர்மானங்கள் அமைகின்றன. மாற்றத்தை விரும்பும் சார்புவாதத்தின் ஒரு நிலைப்பாடாக பண்பாடுகளுக்கு இடையில் (Interculture) காணப்படும் அழகியல் தீர்மானத்தின் செயல்த்தொடரை தட்டிக் கழிப்பது என்பது காணப்படுகின்றது. ஏனெனில் சார்புநிலையில் நின்று அவர்கள் தீர்மானங்களை எடுக்கும் போது அவர்களின் சார்புநிலைக்கு உட்படுத்தப்படாத கலைவடிவங்கள் பற்றிய தீர்மானங் கள் எதிரானதாகக் காணப்படுகின்றன. நாளாந்தம் நடைபெறும் ஒவ்வொரு செயற்பாடுகளும் இதில் உள்ளடக்கப்படும். பல்வேறுபட்ட குழுவின் உறுப்பினர்கள் எடுக்கும் தீர்மானத்தின் தரம் வேறுபட்டு காணப்படலாம். சிலவேளைகளில் ஒன்றுக் கொன்று முரணாகவும்

சார்புநிலையில் நின்று அவர்கள் தீர்மானங்களை எடுக்கும் போது அவர்களின் சார்பு நிலைக்கு உட்படுத்தப் படாத கலை வடிவங்கள் பற்றிய தீமானங்கள் எதிரானதாகக் காணப் படுகின்றன.

இருக்கலாம். ஆனால் சமகால உலகில் இத் தீர்மானங்களின் தரம் உலகளாவிய பண்பாட்டை வரையறுப்பதில் அடிப்படையானதாகும். அதிகமான விமர்சகர்கள் அதிகளவு நேரத்தைக் கீழ்த்தரமான கலை வேலைப்பாடுகள் பற்றிய ஆரோக்கியமற்ற விவாதங்களை மேற்கொள்வதிலேயே வீண்விரயம் செய்கின்றனர். இதில் அவர்களின் சார்புநிலை ஆதிக்கம் செலுத்துகின்றது. அவர்களின் சார்புநிலையால் அவர்களின் தீர்மானங்கள் சிலவேளைகளில் குதர்க்கமாக அமைந்து அறிவியல் உலகிற்கு பயன்படாது போகிறது. இது தமிழ் கலை, இலக்கிய சூழலில் இன்றுவரை தொடரும் ஒரு விடயமாகவே காணப்படுகின்றது. சிறந்த படைப்பு என வாதிப்பதற்கான அடிப் படைகள் இல்லாதபோதும் சார்புநிலை காரணமாக கீழ்த்தரமான வீண் விவாதங்களில் ஈடுபடுகின்றனர்.

விமர்சகர்கள், கலை கற்பிக்கும் ஆசிரியர் போன்றோர் குறித்த ஓவியத்தின் தரம் பற்றிய கேள்வியை எழுப்பாமல் அந்த ஓவியத்தின் மொத்த அனுகுமுறை பற்றிய கேள்வியை எழுப்புகின்றனர்.

இங்கே விமர்சகர்கள், கலை கற்பிக்கும் ஆசிரியர் போன்றோர் குறித்த ஓவியத்தின் தரம் பற்றிய கேள்வியை எழுப்பாமல் அந்த ஓவியத்தின் மொத்த அணுகுமுறை பற்றிய கேள்வியை எழுப்பு கின்றனர். இவர்களினுடைய நோக்கமானது நல்லதொரு சமுதாயம் பற்றிய வியாக்கியானமாகவோ அல்லது தீய சமூகத்தினது பாதிப்புப் பற்றியதாகவோ அமையவில்லை என்பதோடு இவை இரண்டிற்கும் இடையில் நின்றுகொண்டு சமூகச் செயற்பாட்டையோ, கலைச் செயற்பாட்டையோ சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான வழிகாட்டியாகவும் அமையாது அவர்களின் புலமை வெளிப்பாட்டு உரையாடல்களாக அமைந்துவிடுகின்றன. இவ்வுரையாடலினூடாக அவர்கள் எடுக்கும் தீர்மானங்கள் அவர்களின் சார்புநிலையை நியாயப்படுத்துவதாகவே முடிந்துவிடுகின்றன. சார்புவாதத்தின் பின்னணியில் இந்தத் தீர்மானங்களின் தரம் சமூக, கலைச் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு கடினமாகவும் கலை உலகில் ஆரோக்கியமற்றதொரு சூழலை தோற்றுவிப்பதாகவும் காணப் படலாம். இருந்தும் நடைமுறையில் இந்தத் தீர்மானங்கள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன.

உலகளாவிய பண்பாட்டின் பண்பு தொடர்பான தீர்மானங்கள் சிலவேளையில் உயர் பெறுமானத்தைப் பிரதிபலிக்கக் கூடியவை. ஒரு ஐரோப்பியன் ஒரு ஆசியச் சிற்பத்தை ரசிக்கும் போது அவனுக்குள்ள ஐரோப்பிய கலை பற்றிய வரையறையை வைத்துக் கொண்டு கலைத்தரத்தை வரையறுப்பான். ஐரோப்பிய ஓவியத்தை உயர்வாகக் கருதும் ஒரு ஆசியாவைச் சேர்ந்த ஒருவன் ஆசியா கலை பற்றிய முற்கற்பிதத்தை அடிப்படையாகக் கொண்டே அதனை இரசிப்பான். ஆனால் இங்கு ஆசிய, ஐரோப்பிய கலையின் பெறுமானம் பற்றிய தீர்மானத்தைக் கண்டு கொள்வது கடினமான தொன்றாகும். ஏனெனில் ஆசிய, ஐரோப்பிய கலை பற்றிய நோக்கு

அவர்களின் தீர்மானங்களில் உண்மையில் கலந்திருப்பதால் அத்தீர்மானத்தை எடுப்பதற்கு அதிகளவு நேரம் எடுக்கின்றது. அந்தவகையில் பண்பாடுகளின் குறுக்கீடுகள் பண்பாட்டு செயல்த் தொடரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வழியாக அமைகின்றது. பண்பாட்டின் வெளிப்பாடு பற்றிய நோக்கு வழக்கத்திற்கு மாறானதாக புதுமையானதாக (Exotic) கருதப்படும் போது அது இன்னொருவரின் புதிய வெளிப்பாட்டிற்கு ஒத்துழைப்புத் தருவதாக அமைகின்றது. இதற்கான சிறந்த உதாரணமாக குறிப்பிடக்கூடியது 20ஆம் நூற்றாண்டில் காணப்படும் ஜஸ்[4] (Jazz) மற்றும் ரொக்[5] (Rock) போன்ற இசை வடிவங்களாகும். இந்த ஒவ்வொரு இசைவடிவமும் ஐரோப்பிய ஒத்திசைவு (Harmonic) மற்றும் ஆபிரிக்க ஓத்திசை மரபு என்பவற்றிலிருந்து புதிய கலப்பு (Hybrid) இசைப் பாரம்பரியத்தை உருவாக்கின. இதுபோன்றே சினிமா இசையில் A.R. ரகுமான் அவர்கள் இந்திய இசைக்கூறுகளுடன் மேற்கத்திய இசைக் கூறுகளை இணைத்து புதியதொரு தமிழ் சினிமா இசை வடிவத்தைக் கட்டமைத்தார். இப்புதிய இசை இந்திய சினிமாவிசைக் கலைஞர்கள் பலரையும் கவர்ந்து முக்கியமானதொரு போக்காக மேற்கிளம்பியது. இதனால் கலப்புத்தன்மை (Hybridity) என்பதை பல்வேறுபாடுகளைக் கலந்து அவற்றை இணைத்து வெளிப்படுத்தல் என்று புரிந்து கொள்ளலாம்.

சில மக்கள் கலப்பாக்கத்தின் மூலம் உருவாக்கப்படும் வடிவங் களை விரும்புவதில்லை. ஏனெனில் அவர்களின் தனித்துவமான பண்பாட்டு வடிவங்கள் கலப்பாக்கத்தால் அவற்றின் தனித்துவத்தை இழக்கின்றன என்னும் அச்சமே இதற்கான அடிப்படையாகும். சில தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்கள் கலப்பாகத்தின் காரணமாக விடுபட்டுப்போகின்றன. இந்தச் செயற்றொடரினால் ஏற்படும் பண்பாட்டு இழப்பு சிலவேளைகளில் பண்பாட்டு ஓரினவாக்கம் (Homogenizition) எனக் குறிப்பிடப்படுகின்றது. இச்செயற்பாட்டை ஆசிய மக்கள் மேற்கத்திய மயமாக்கம் எனக் குறிப்பிடுகின்றனர். ஐரோப்பியர் அமெரிக்க மயமாக்கம் எனக் குறிப்பிடுகின்றனர். அமெரிக்கர்கள் சிலவேளைகளில் உலக மயமாக்கம் (Globalization) எனவும் குறிப்பிடுகின்றனர். பண்பாட்டின் ஓரினவாக்கம் என்பது உலகளாவிய நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் மிகப்பெரிய பண்பாட்டின் வெளிப்பாடாக இனங் காணப்படுகின்றது. பொப்பியூலர்

சில மக்கள் கலப்பாக் கத்தின் மூலம் உருவாக்கப்படும் வடிவங்களை விரும்புவ தில்லை. ஏனெனில் அவர்களின் தனித்துவமான பண்பாட்டு வடிவங்கள் கலப்பாக்கத்தால் அவற்றின் தனித்துவத்தை இழக்கின்றன என்னும் அச்சமே இதற்கான அடிப்படையாகும்.

4. ஜஸ் இசையானது ஆபிரிக்க - அமெரிக்கர்களிடம் ஐக்கிய அமெரிக்காவில் காணப்படும் நியூ ஓஸ்லின் என்னும் இடத்தில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உருவாக்கப்பட்டது. இவ்விசை வடிவம் பாரம்பரிய மற்றும் பிரபல்யமான வடிவங்களில் இருந்து உருவாக்கப்பட்டது. இவை அனைத்தும் ஆபிரிக்க-அமெரிக்க மற்றும் ஐரோப்பிய - அமெரிக்க மரபில் இருந்து உருவாக்கப்பட்டவை.

இசை (Popular Music), விளம்பரங்கள், ஹொலிவூட் சினிமா, தொலைக்காட்சி போன்றவற்றை பண்பாட்டு ஓரினவாக்கத்திற்கான உதாரணங்களாக சுட்டிக்காட்டத்தக்கவை. கைத்தொழில் உற்பத்திகளாக மேற்கொள்ளப்படும் இப்பண்பாட்டு உற்பத்திகள் பிரதானமாக அமெரிக்காவுடன் தொடர்புடையனவாக அல்லது அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குட்பட்டனவாகக் காணப்படுகின்றன. பண்பாட்டு ஓரினவாக்கத்திற்கான இன்னொரு பெயராக மக்டொனால்டேசன் (McDonaldazation)[6] கொள்ளப்படுகிறது.

கடந்த 20ஆம் நூற்றாண்டின் கால் அரைப்பகுதியைவிடவும் ஓரினவாக்கம் காரணமாக தனித்துவத் தன்மை இழக்கப்பட்டமை வரலாற்றுரீதியாக மிகவும் ஆழமாக உணரப்பட்டுள்ளது. இச் சிந்தனையின் மூலத்தை காலனியத்துடன் தொடர்புடையதாகவே நோக்கவேண்டும். ஐரோப்பிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள் அல்லாத நாடுகளின் பண்பாடுகளைப் பொருளாதார ரீதியாக அவர்களின் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தியதுடன் அரசியல் ரீதியாகவும் அந்நாடுகளை கட்டுப்படுத்தினர். ஒரு நூற்றாண்டுகால செயற்றொடராக இது நீடித்திருந்தது. இலங்கையில் காலனித்து வத்தின் தாக்கம் பற்றிக் குறிப்பிடும் மாட்டின் விக்கிரமசிங்க "இலங்கையில் புத்திஜீவிகள் வெள்ளையர்களிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் போத்துகேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் அறிமுகப்படுத்திய நோயை (காலனித்து வத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை) வேரோடு பிடுங்க முடியாது வேதனைப்பட்டனர். பிரித்தானியர் உள்ளகக் கட்டமைப்பில் ஏற்படுத்திய வடிவம் மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்ததாகும். இராணுவ முனைப்பற்ற முறையில் பொருளாதார, அரசியல், பண்பாட்டு அம்சங்களால் இதனை ஏற்படுத்தியிருந்தனர்" (Wickramasinhe, Martin., 1977: 56) எனக் குறிப்பிடுகின்றார். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் இலங்கையரால் அவர்களின் பண்பாட்டு மரபுகளை மீளமைத்துக்கொள்ள முடியாத விதத்தில் காலனியத்தின் பண்பாட்டு ஓரினவாக்கச் செயற்பாடு காணப்பட்டது என்பதை மாட்டின் விக்கிரமசிங்க கவலையுடன் தெளிவுபடுத்து கின்றார். நவகாலனித்துவ அல்லது பிற்காலனித்துவத்துடன் தொடர்புடைய உலகமயமாக்கல் செயற்றொடராக கலைகள் அல்லது மொழிகள் என்பவற்றில் இருந்து உருவானதாக கலப்பாக்கம் பார்க்கப்பட்டது.

நவகாலனித்துவ அல்லது பிற்காலனித்து வத்துடன் தொடர்புடைய உலக மயமாக்கல் செயற் றொடராக கலைகள் அல்லது மொழிகள் என்பவற்றில் இருந்து உருவானதாக கலப்பாக்கம் பார்க்கப்பட்டது.

5. Rock ans Roll என 1950களில் ஐக்கிய அமெரிக்காவில் உருவான மிகவும் பிரபல்யமானதொரு இசை வடிவம் ரொக் இசையாகும். இதன் மூலம் 1940, 1950களில் காணப்பட்ட Rock ans Roll இசையாகும். ரொக் இசை ஏனைய இசைவடிவங்களான Electonic Bloues மற்றும் Rhythm and Bloues, நாட்டுப்புற இசைவடிவம் என்பவற்றைவிடவும் பலமாக வளர்ச்சியடைந்த வடிவமாகும்.

காலனியவாதிகளின் மனநிலை ஐரோப்பிய பண்பாட்டு வெளிப்பாடுகளை கூடுதலானளவு நடைமுறைப்படுத்துவதாகவே அமைந்திருந்தது. இதற்கான சிறந்த உதாரணமாக தென்கிழக்கு அவுஸ்திரேலியப் பழங்குடியினர் அடையாளங்களை காலனி யாதிக்கம் இல்லாது ஒழிப்பதற்கு எடுத்த முயற்சியைக் குறிப்பிடலாம். காலனியத்தால் அவர்களின் நிலங்களை இழந்து, நோயால் அழிக்கப்பட்டு, கொலைசெய்யப்பட்டு, அவர்களுக்கான வாழ்விடத்தில் இருந்து விரட்டப்பட்டு, அவர்களின் குழந்தைகளிடமிருந்து வலுகட்டாயமாகப் பிரிக்கப்பட்டு அவர்களின் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொண்டனர். இவ்வாறான சூழலால் 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் அவர்களின் கலை அடையாளங்களையும் இல்லாது செய்யப்படுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. காலனியாதிக்கத்தின் அரசியல், பண்பாட்டு ஆதிக்கம் அவர்களின் உண்மையான வாழ்க்கையில் இருந்து அவர்களை அன்னியப்படுத்தியது. இக்கட்டத்தில் அவுஸ்திரேலியப் பழங்குடியினர் காலனித்துவ அனுபவங்களை ஐரோப்பிய கலைவடிவம், கலையாக்க நுட்பம் என்பவற்றைப் பயன்படுத்தி வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அவர்களின் கலையடையாளங்களை அவர்களின் படைப்புக்களில் அவர்கள் பதிக்கமுடியாத விதத்தில் இது அமைந்திருந்தது (Morphy, Howard., 2013:319-320).

இந்நிலையில் உலகமயமாக்கலின் விளைவான கலப்பாக்கத்தின் விருத்தியானது நன்மையானதா அல்லது தீமையானதா என்னும் கேள்வியை எழுப்புகின்றது. இக்கேள்விக்கான பதில் மிகவும் முக்கியமானதொன்றாக இவ்விடத்தில் அமைகின்றது. கலப்பாக்க கலைகள் எதிர்மாறான செயற்பாட்டைக் கொண்டிருக்குமானால் நியாயமற்ற வர்த்தகச் செயற்பாடுகள், உள்ளூர் சந்தைகளின் சரிவு, ஊழியர்களின் உழைப்பினைச் சுரண்டல் என்பன நடைபெறும். இவ்வாறு ஏற்படின் தற்கால உலகச் சந்தையில் கலை உற்பத்தியானது விமர்சிக்கத்தக்கதாகவும் சவால் நிறைந்ததாகவும் விளங்கும். ஆனால் நாங்கள் பொருளாதாரரீதியான தொடர்புடன் எப்போதும் இருப்போம் என வரலாறு கூறுகின்றது. வர்த்தகமானது உலகமயமாக்கச் செயற்பாட்டில் முக்கியமானதொன்று. நவீன பொருளாதார யதார்த்தம் அல்லது உண்மைத் தன்மையினை அதிகரிக்கக்கூடிய அல்லது விமர்சிக்கத்தக்க நோக்காகவே உலக மயமாக்கம் காணப்படுகின்றது. ஆனால் இச்செயற்பாடு நிறுத்தப்படக்கூடியதல்ல.

நவீன பொருளாதார யதார்த்தம் அல்லது உண்மைத் தன்மையினை அதிகரிக்கக் கூடிய அல்லது விமர்சிக்கத்தக்க நோக்காகவே உலக மயமாக்கம் காணப் படுகின்றது. ஆனால் இச்செயற்பாடு நிறுத்தப்படக் கூடியதல்ல.

6. துரித உணவுக்கு (Fast Food) அடிமையாகும் மக்கள் குழுவினரைக் குறிப் பதற்கு McDonaldization என்னும் சொல் கையாளப்படுகின்றது.

பண்பாட்டு ஓரினவாக்கத்தின் தாக்கத்தின் விளைவுகள் குறிப்பாக கவனம் செலுத்தத்தக்கன. இதனால் குறிப்பாக உள்ளூர் மொழிகள் மற்றும் பாரம்பரியங்களின் பெறுமானங்கள் நுட்பமாக தாக்கப்பட்டதுடன் பொருளாதாரமும் பலவீனப்படுத்தப்பட்டது. சில ஆய்வுகள் ஓரின வாதத்திற்கு எதிரான உள்ளூர் மரபுகளின் எதிர்ப்புக்களைச் சுட்டிக்காட்டின. இருந்தபோதிலும் உலகமயமாக்கம் கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட பண்பாட்டையே பரப்பியது. ஆய்வாளர்கள் கலைப் போக்கில் இந்த இரண்டுவிதமான பிற்காலச் சாத்தியப்பாடுகளை வலியுறுத்திக் கூறமுனைகின்றனர். நவீன சகாப்தத்தில் கலைஞர்கள் வெகுசனப்பண்பாட்டின் நோக்கின் எதிர்ப்பினை வரையறுகின்றனர். சர்வதேசரீதியான பாணியின் வளர்ச்சிக்கு ஏற்பவே ஆய்வு வடிவமைப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சர்வதேசரீதியான சந்தைகளில் உற்பத்திகளை விருத்தி செய்யும் நிறுவனங்களிலேயே கலை வடிவமைப்பாளர்கள் அதிகளவில் வேலை செய்தனர். கலைஞர்கள் சில வேளைகளில் கைத்தொழில் பண்பாட்டில் காணப் படுகின்ற கலப்பாக்க வெளிப்பாட்டு வடிவங்களைப் பயன்படுத்தி ஆய்வு செய்ய ஆர்வமுடையவர்களாக இருந்ததுடன் கலப்பாக்கத்தின் இயல்புகளை விமர்சனரீதியாக அறிய முயல்பவர்களாகவும் காணப் பட்டனர்.

ஒரு பண்பாட்டி னுடைய பண்புகள் இன்னொரு பண்பாட்டிற்கு தொடர்பு களினூ டாகப் பரவுதல் பண்பாட்டுப் பரவலாக்கம் எனலாம். பண்பாட்டுப் பரவலாக்கம் மிகநீண்டதும் பல்வேறுதுமான வரலாறுகளைக் கொண்டது மாகும்.

பண்பாட்டு கலப்பாக்கமானது பண்பாட்டு பரவலாக்கம் (Cultural Diffution) என்னும் பரந்த செயற்பாட்டின் விளைவாகும். ஒரு பண்பாட்டினுடைய பண்புகள் இன்னொரு பண்பாட்டிற்கு தொடர்பு களினூடாகப் பரவுதல் பண்பாட்டுப் பரவலாக்கம் எனலாம். பண்பாட்டுப் பரவலாக்கம் மிகநீண்டதும் பல்வேறுவிதமான வரலாறுகளைக் கொண்டதுமாகும். இது யுத்தம், வர்த்தகம் ஆகியவற்றின் மூலமே அதிகளவில் இடம்பெறுள்ளது. சமயமே பண்பாட்டு பரவலாக்கம் மற்றும் யுத்தத்திற்கான மிக முக்கியமான காரணியாகும். மிஷனறிகள் நிறுவனப்படுத்தப்பட்ட அமைப்பை அறிமுகப்படுத்தின. பல்வேறு பகுதிகளில் காணப்படும் பூர்வீக (Native) சமூகங்களுக்கு இது கல்வி நிறுவனம் போன்று செயற்பட்டது. கல்வி நிறுவனங்கள், தேவாலையங்கள் என்பவை ஒழுங்குபடுத்தப்பட்ட கல்விக்கான ஒரு காரணியாக அமைந்திருந்தன. இருப்பினும் இவை பண்பாட்டு பரவலாக்கத்திற்கான ஒரு கால்வாயாகவே செயற்பட்டன. உலக பண்பாட்டுத் தொடர்புகள் உடன்பாட்டிற்கும் சூழ்ச்சி நயத்திறம் வாய்த்த செயற்பாட்டிற்கும் மக்களைக் கொண்டு செல்கின்றன. நிலத்திற்கான உரிமையுடன் இது இணைக்கப்பட்டிருந்தது. உள்ளூர் அரசியல் கட்டுமானங்கள் காலனித்துவ அரசின் விடயங்களின் எதிர்பார்க்கைக்கு உட்பட்டதாக அபிவிருத்தி அடைந்திருந்தன. ஆனால் அவை முன்னைய பாரம்பரிய அரசியல் செயற்பாடுகளின் தொடர்புகளைப் பிரதிபலித்தன. உலகில் காணப்படும் அதிகமான

சமய நிறுவனங்கள் ஐரோப்பிய சமயங்கள், அரச அமைப்பு, கல்விமுறை என்பவற்றையே பிரதிபலித்ததுடன் உள்ளூர் பழக்க வழக்கங்களுடன் இணைக்கப்பட்டிருந்தன. கலப்பாக்கம் அரசியல் கட்டுமானங்கள், மொழிகள், கலை வெளிப்பாடுகள் என்பவற்றில் மக்களின் பரஸ்பரம் தொடர்பினைப் பிரதிபலிக்கின்றன. முழுமையாக ஒரு குழு இன்னொரு குழு மீது ஆதிக்கம் செலுத்துவதில்லை. இது தொடர்பாடல் பற்றிப் பேசுவதற்கு மிகவும் பொருத்தமான வழியாக இருந்தது. வேறு ஒரு பண்பாட்டிலிருந்து வந்ததால் விசித்திரமான ஆர்வத்தைத் தூண்டுவதாகச் சொல்லப்பட்டது. பௌத்தர்களாகவும் இந்துக்களாகவும் இலங்கையில் இருந்த தமிழ், சிங்கள மக்களை காலனித்துவத்தின் திணிப்பான கிறித்தவ மதம் சர்வாதிகாரத்தனமான முறையில் கவர்ந்துகொண்டது இங்கு நினைவு கூரத்தக்கது.

கலப்பாக்கம் அரசியல் கட்டுமானங்கள், மொழிகள், கலை வெளிப்பாடுகள் என்பவற்றில் மக்களின் பரஸ்பரம் தொடர்பினைப் பிரதிபலிக் கின்றன.

பண்பாட்டுத் தொடர்பு, பண்பாட்டு மாற்றம் என்னும் செயற் பாடுகள் மிகவும் பரந்ததும் வேறுபட்ட பகுதிகளைக் கொண்டதுமாக விளங்குகின்றன. சில பூர்வீகக் குடிமக்கள் (Native People) பண்பாட்டு இணைப்பு (Incorparation) என்னும் முறையினைப் பின்பற்றுகின்றனர். இந்தமுறையில் இவர்கள் பூர்வீகமற்ற (Non-Native) தொழில்நுட்ப பண்பாட்டு நோக்கங்களை உள்வாங்குகின்றனர். ஆனால் உண்மையான பண்பாட்டுரீதியான முறையுடன் இந்த நோக்கங்கள் செயற்பாட்டுரீதியான தொடர்பினைக் கொண்டுள்ளன என உறுதி செய்யப்பட்டுள்ளது. கலப்பாக்கத்தின் ஒரு வடிவமான இது உண்மையான பண்பாட்டின் பண்பினை கொண்டுள்ளது. சிறியளவான பழைய பண்பாடுகள் புதிய பண்பாட்டு முறையுடன் தொடர்புபடுவதனால் அவை மாற்றீடு செய்யப்படுகின்றன. அப்படியிருந்தும் வழக்கிலுள்ள செயற்பாடுகளை சில புதிய செயற்பாடுகள் மேம்படுத்தக்கூடும். ஆபிரிக்க நவீன ஓவியரான இப்ராகிம் எல் சலாரி (Ibrahim El Salari) பிகாசோவின் கியூபிசப் பாணியை தனக்கான சிறந்த முன்மாதிரி யாகக் கருதி பின்பற்றி தன்னுடைய நவீன படைப்புக்களை உருவாக்கியதாகவும் அதனூடாக தனது பண்பாட்டு அடையாளத்தைக் தொடர்ந்து பேணியதாகவும் (Kasfir, Sidney.Littleld., 2014: 128) குறிப்பிடும் கருத்துக்கள் இங்கு ஒப்புநோக்கத்தக்கன. இதுபோன்று இலங்கையில் தமிழ், சிங்கள நவீன கலைச் செயற்பாட்டாளர்களிடையே பல உதாரணங்களைக் காட்டலாம்.

பண்பாட்டு ஒருங்கிணைப்பு (Cultural Assimilation) என்பது ஒரு முனைக்கு (ஒரு பண்பாட்டிற்கு) எதிரான தொடர்பினைக் கொண்டது. இதன்போது பூர்வீக பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் ஐரோப்பிய, அமெரிக்க பண்பாட்டு அமைப்புக்களின் நோக்கிற்கு மாற்றீடு செய்யப்படுகின்றன. இது பூர்வீக பண்பாட்டு முறையினை முடிவுக் கட்டத்தை நோக்கிக் கொண்டு செல்வதற்கான தந்திரோபாயமான

பண்பாட்டு ஒருங்கிணைப்பு (Cultural Assimilation) என்பது ஒரு முனைக்கு (ஒரு பண்பாட்டிற்கு) எதிரான தொடர்பினைக் கொண்டது. இதன்போது பூர்வீக பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் ஐரோப்பிய, அமெரிக்க பண்பாட்டு அமைப்புக்களின் நோக்கிற்கு மாற்றீடு செய்யப் படுகின்றது.

தொரு முறையாகவே பார்க்கப்படவேண்டியது. பூர்வீக பண்பாட்டு முறைகள் இதனால் இல்லாது ஒழிக்கப்படுகின்றன. 1850 களில் தேயிலை உற்பத்தித் தொழில்த்துறை இந்தியாவில் வேகமாக வளர்ச்சியடைந்தது. அதற்கான தொழிலாளர்கள் அசாமிற்கு வட-கிழக்கு இந்தியாவில் இருந்து பெற்றுக்கொள்ளப் பட்டனர். பிரித்தானிய முதலாளிகள் பெரியளவான தொழிலாளர்களை உருவாக்கினர். ஜாகார்காந் பிராந்தியத்திலிருந்து (Jharkhand State) பெருமளவான தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டனர். இவர்கள் வேறுபட்ட இனத்துவ அடையாளத்தைக் கொண்டவர்கள். அவர்களின் அடையாளத்தை அழித்து புதிய அடையாளத்தை தோட்டத் தொழில்துறை உருவாக்கியது. இவர்களின் வாழ்க்கைச் சூழல் புதிய பண்பாட்டைத் தோற்றுவித்தது. இது அங்கிருந்த பல்வேறுபட்ட இனக்குழுக்களினதும் கலவையாக உருவாகியது. ஹிந்தி, வங்காளம் மற்றும் அவர்களின் மொழியில் இருந்து வந்த சில சொற்களின் கலப்புடன் புதிய மொழி உருவானது. அவர்களின் பண்பாட்டு வடிவங்கள் அவர்களின் புதிய வாழ்வியல் முறைமைக்கேற்ப அவர்களின் பாரம்பரிய வடிவங்களான சடங்குகள், பாடல்கள், நடனங்கள் என்பவற்றை இணைத்து உருவாக்கப்பட்டன. கரம் பூஜா (Karam Puja) என்பது இன்று அசாமில் உள்ள தோட்டத்தொழிலாளர் கொண்டாடும் ஒரு விழாவாகும். ஜமூர் (Jhumur) அவர்களின் இன்றைய கிராமிய நடனமாகும் (Sen, Soumen,. 2003:10). இவை அவர்களின் புதிய வாழ்வியல் சூழலில் தோன்றிய வடிவங்கள். இருந்தும் இவை அவர்களின் பாரம்பரிய பண்பாட்டு அடையாளங்களைப் பிரதிபலிக்காது. இது காலனிய செயற்பாட்டின் ஒரு விளைவாகவே அமைகின்றது. இந்தியாவில் இனக்குழுக்களிடம் காணப்பட்ட பண்பாட்டு அடையாளங்கள் தோட்டத் தொழில்த்துறையினுள் அவர்கள் உள்வாங்கப்படுவதன் ஊடாக அழிக்கப்பட்டு, தோட்டத் தொழில் துறையானது அவர்களை அடிமையாக வைத்திருந்து தமது பொருளாதார நோக்கை மேம்படுத்துவதற்கான புதியதொரு கலப்பாக்கப் பண்பாட்டினை உருவாக்கிவிடுகின்றது.

மேற்கத்திய அமெரிக்கப் பண்பாட்டுப் பெறுமானங்களால் ஆசிய, ஆபிரிக்க பண்பாட்டுப் பெறுமானங்கள் மாற்றீடு செய்யப் படுகின்றன. இதற்கான ஒரு எடுத்துக்காட்டாக பல வடஅமெரிக்க, இந்தியப் பழங்குடியினர் (Tribes) பண்பாட்டு ஒருங்கிணைப்பினை அனுபவித்துள்ளதைக் குறிப்பிடலாம். இருந்தும் பழங்குடிகளின் நிலம் ஐரோப்பிய அமெரிக்க மக்கள் தொகை சக்தி வளநிலையங் களுக்கு (Power Centers) அருகில் இருக்கும் தன்மையினை சார்ந்ததாகவே ஒருங்கிணைப்பின் வேகம் எண்ணிக்கை என்பன காணப்படும். வடஅமெரிக்காவில் காணப்படும் அனைத்துப் புலம்பெயர் குழுக்களும் இந்த ஒருங்கிணைப்பிற்கான அழுத்தத்தினை

அனுபவித்துள்ளன. வரலாற்றுரீதியாக பல அரசுகளினது நோக்கமாக அவர்களுக்குக் கீழ் காணப்படும் மக்களை ஒருங்கிணைத்தல் என்பது காணப்பட்டது.

இலங்கையில் ஏற்பட்ட காலனித்துவ ஆட்சி ஐரோப்பிய பண்பாட்டு பெறுமானங்களுடன் இலங்கை மக்களின் பண்பாட்டு பெறுமானங்களை ஒருங்கிணைப்பதற்கு ஏற்றவிதத்தில் பல்வேறு தந்திரோபாயங்களையும் மேற்கொண்டது. இதனால் இலங்கையில் காணப்பட்ட தமிழ், சிங்கள, மற்றும் பழங்குடி மக்களின் பண்பாட்டுப் பெறுமானங்கள் ஐரோப்பியப் பண்பாட்டால் மாற்றீடு செய்யப் படுவதற்கான முயற்றிகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தும் சுதந்திரத்தின் பின்னர் தேசிய இனங்கள் அவர்களின் பண்பாடுகளை மீளக் கட்டமைக்க முயற்சித்த போதும் அவர்களால் காலனித்து வத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பிலிருந்து விடுபடமுடிய வில்லை. இது போல் இலங்கையில் காணப்படும் பழங்குடியினராகிய வேடர்களின் பண்பாடுப் பெறுமானங்கள் சிங்கள, தமிழ் சமூகங்களின் பண்பாட்டுப் பெறுமானங்கள் மாற்றீடு செய்யப்படும் செயற்பாடானது இன்றுவரை நடந்துகொண்டிருக்கிறது. இலங்கை அரசின் நிர்வாகக் கட்டமைப்பு பழங்குடியினர் அவர்களின் பண்பாட்டுப் பெறுமானங்களை தனித்துவமாகப் பேணுவதற்கு இடம் அளிக்கக்கூடிய விதத்தில் அமையவில்லை. காடுகளில் சுதந்திரமாக நடமாடுவது, தேவையான உணவுகளை வேட்டையாடிப் பெற்றுக்கொள்வது, மொழி, சடங்குகள், குழு நிலை வாழ்வு போன்ற விடயங்களைப் பேணுவதற்கும் அரச சட்டமும் நிர்வாக பொறிமுறையும் இடமளியாது அவர்களை குறித்த நிலப்பரப்பில் வரையறுக்கின்றன. இது இயல்பாகவே பெரும் பான்மைச் சமூகங்களிரின் பண்பாட்டு அம்சங்களுடன் அவர்களை ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் காணப்படும் பழங் குடியினராகிய வேடர்களின் பண்பாடுப் பெறுமானங்கள் சிங்கள, தமிழ் சமூகங்களின் பண்பாட்டும் பெறுமானங்கள் மாற்றீடு செய்யப்படும் செயற்பாடானது இன்றுவரை நடந்து கொண்டி ருக்கிறது.

பண்பாட்டு ஒருங்கிணைப்பின் பாதிப்பு இன்னொரு நிலையில் புலம்பெயர்ந்தவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளின் தேசிய மொழி மற்றும் பழக்கவழக்கங்களை கற்றுக்கொள்ள வேண்டுமா? என்னும் வினாவை எழுப்புகின்றது. இது புலம்பெயர்வாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாகவும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இன்று காணப்படும் உயிர்ப்பான வாதமாகவும் காணப்படுகின்றது. இப்பின்புலத்திலேயே இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் அவர்களின் பண்பாட்டுக் கூறுகளைப் பேண முயற்சிப்பதும் அதனால் எதிர் கொள்ளும் சவால்களும் குறிப்பிடத்தக்கவை. புலம்பெயர்ந்தவர்கள் அவர்களின் அடுத்த தலைமுறையினரை அவர்களின் பண்பாட்டு சூழலுக்குள் கொண்டுவர முயற்சிக்கும் போதே இச்சவால்களை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்குரிய தாய்மொழியில் கற்பிக்கப்

பண்பாட்டு ஒருங்கிணைப் பின் பாதிப்பு இன்னொரு நிலையில் புலம்பெயர்ந் தவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளின் தேசிய மொழி மற்றும் பழக்க வழக்கங்களை கற்றுக்கொள்ள வேண்டுமா? என்னும் வினாவை எழுப்புகின்றது.

படாமல் புலம்பெயர்வாளர்கள் ஆங்கில /புலம்பெயர் நாடுகளுக்குரிய தேசிய மொழியிலே கற்பிக்கப்படுகின்றனர். இது புலம்பெயர்வாளர் களின் தேசிய மொழியைத் தவிர்ந்து புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் தேசிய மொழிகளில் கற்க வேண்டுமா என்னும் கேள்வியை அவர்கள் எழுப்புகின்றனர். இதனால் அதிகளவான புலம்பெயர்வாளர் தமது பண்பாட்டு மரபுகளை விட்டுக்கொடுத்து புலம்பெயர்ந்த நாடுகளின் பண்பாட்டு மரபுகளை பேணும் நிலைக்கு அவர்களை அறியாமலேயே தள்ளப்படுகின்றனர். இங்கு மேற்கத்திய பண்பாட்டால் தங்கள் பண்பாடுகள் மாற்றீடு செய்யப்படுவதை உணர்வுபூர்வமாக உணர்ந்தும் அவர்களால் அம்மாற்றத்திலிருந்து வெளியே வரமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இந்த ஒருங்கிணைப்பை பலர் ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்கின்றனர். ஏனெனில் அவர்களின் பண்பாட்டு மரபுகள் இதனால் இல்லாமல் போய்விடும் என அச்சம் கொள்கின்றனர். ஒருங்கிணைப் பிற்கான நவீன விவாதம் பற்றிய சாத்தியக்கூறுகளை இவ்வாறான கொள்கைப் பிடிப்பான செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களில் கலப்பாக்கமானது புலம் பெயர்வின் மூலம் கலப்பாக்கத்தை அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடுகளை அதிகரித்துள்ளது. “Tex Max”[7] போன்ற பதங்கள்கூட கலப்பாக்க வெளிப்பாட்டினை பக்குவமாக உள்வாங்கியவையாகக் காணப்படுகின்றன.

கலையில் மேற்கத்திய செயற்பாடுகள் உள்வாங்கப்படுவதற்கு கலப்பாக்கம் உதவுகின்றது. ஆபிரிக்கா, இந்தியா, தூரகிழக்கு நாடுகள், அமெரிக்கா போன்ற நாடுகளில் பாரம்பரிய ஓவியங்களைக் கொண்டிராத மக்களுக்கான ஈசல் ஓவியம் (Easel Painting) இதற்கு உதாரணமாகும். ஒருங்கிணைப்புக்கூட ஐரோப்பியப் பாரம்பரியத்தில் கலப்பாக்கத்தின் முழு வடிவத்தையும் உள்வாங்கும் போதுதான் முழுமை பெறுகின்றது. பாரம்பரிய வகைப்பாடான நிலைப் பொருட் கூட்டம் (Still Life), உருவ ஓவியம் (Figure Painting), தரைத்தோற்ற ஓவியம், அருவ ஓவியம் போன்ற பல வடிவங்கள் முழுமையாக ஐரோப்பிய அல்லாத மக்களிடம் இருந்தே உள்வாங்கப்பட்டன. ஐரோப்பியர் அல்லாத கலைஞர்கள் பயன்படுத்தும் சமகாலக் கலை வடிவங்களான ஒருங்கிணைப்புக் கலை (Installation Art), காணொளிக் கலை (Video Art), கணினி வரைகலை (Computer Graphic) என்பன கலையில் ஒருங்கிணைப் பிற்கான அடிப்படை என ஒருவர் வாதிடலாம். எப்படி இருப்பினும் நாம் வடிவத்தின் வெளிப்பாட்டை உள்வாங்கி பண்பாட்டு பரவலாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்மறையான தீர்மானங்களை தனியாக மேற்கொள்ளும் போது

7. முதல் அமெரிக்க மற்றும் மெச்சிக்க கலப்பைக் குறிப்பதற்கு இப்பதம் கையாளப்படுகின்றது.

கவனமாகக் இருக்கவேண்டும். ஒரு ஐரோப்பிய வெளிப்பாட்டு வடிவத்தினை உள்வாங்குதல் ஐரோப்பியர் அல்லாத ஒருவருக்கு சாத்தியமானதா? என்பதை இவ்விடத்தில் சிந்திக்கவேண்டியுள்ளது.

இச்சாதகமான கருத்துக்கள் பண்பாட்டுப் பரவலாக்கத்திற்கான இன்னொரு வகைப்பாடான பண்பாட்டு ஒருங்கிணைப்பை நோக்கி எம்மை நகர்த்துகின்றன. பண்பாட்டு ஒருங்கிணைப்பு (Integration) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்பாட்டு அமைப்புக்களை இணைக்கின்றது. பண்பாட்டு இணைப்பில் பூர்வீகமாக (Native) இருந்துவரும் பண்பாட்டு முறை பாதிக்கப்படுவதுடன் பண்பாட்டு வடிவமானது குறிப்பிட்ட அளவில் மாற்றமடைந்துமுள்ளது. இது பண்பாட்டு ரீதியிலான சேர்மானத்திலிருந்து வரும் வேறுபட்ட ஒருங்கிணைப்பாகும். பூர்வீக பண்பாட்டு முறையானது முழுமையாக மாற்றீடு செய்யப்பட்டிருப்பதில்லை. இது ஓரினவாக்க (Homogenizition) செயற்பாட்டிலிருந்து வேறுபட்டுள்ளது. இந்த இணைப்பை இரட்டைப் பண்பாட்டுடனும் (Bi-Culteralism) தொடர்பு படுத்தி நோக்கமுடியாது. அதிலிருந்தும் வேறுபட்டது. இதில் ஒருவரின் நடத்தைக்கு ஏற்றவாறு அவரது பண்பாட்டு விடயம் மாறுபடும். இரட்டைப் பண்பாட்டுவியல் இரண்டு பண்பாட்டு அமைப்புக்களை உள்ளடக்கியது. இது இரண்டு பண்பாடுகளையும் ஒன்றாக்காது. இது அமைப்புக்களின் ஒருங்கிணைப்பாகும். இதனை பண்பாட்டு ஒருங்கிணைப்பின் பிரதான பண்பாகக் குறிப்பிடலாம். இதனை கலப்பாக்கம் என்றும் குறிப்பிடலாம்.

இரட்டைப் பண்பாட்டு வியல் இரண்டு பண்பாட்டு அமைப்புக்களை உள்ளடக்கியது. இது இரண்டு பண்பாடுகளையும் ஒன்றாக்காது. இது அமைப்புக்களின் ஒருங்கிணைப் பாகும். இதனை பண்பாட்டு ஒருங்கிணைப் பின் பிரதான பண்பாகக் குறிப்பிடலாம்.

பண்பாட்டு கலப்பாக்கமானது பண்பாட்டுப் பரவலின் குறிப்பிட்ட ஒரு வகையினைச் சுட்டிக்காட்டுகின்றது. பண்பாட்டு இணைப்பு மற்றும் ஒருங்கிணைப்பிலிருந்து இது வேறுபட்டதாகும். இந்த பண்பாட்டுப் பரவலாக்கச் செயல் தொடரினூடாக பண்பாடுகள் முன்னேற்றமடையலாம். பொதுவாக இந்த முன்னேற்றத்தினை இணைப்பிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். குறிப்பாக மேற்கதிய பண்பாட்டில் பொருள் மற்றும் தொழில்நுட்பரீதியான நோக்கில் ஒருங்கிணைப்பில் ஈடுபடவேண்டும். இருப்பினும் மேலாதிக்கம் செலுத்தும் பண்பாட்டில் பொருளாதார வற்புறுத்தல் அல்லது அழுத்தத்தினால் ஒருங்கிணைப்பானது தடுக்கப்படுகின்றது. இருந்த போதிலும் பூர்வீக்குடி (Native) மக்களின் வாழ்வியல் முறையானது படிப்படியாக மறைந்து போவதற்கான காரணம் மிகப்பெரிய தேசிய உறைவிடங்கள் அவற்றினை உறிஞ்சிக் கொள்வதாகும். பிரேசில், இந்தோனேசியா, சீனா, மெச்சிக்கோ, இந்தியா, இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்கா, ஆசியா என்பவற்றில் காணப்படும் பல உள்ளூர் பண்பாடுகள், பண்பாட்டு ஒருங்கிணைப்பு காரணமாக ஒன்றிணைந்து அவற்றின் பண்பாடுகள் அழிந்து போவதற்குக் காரணமாகின்றன. சர்வதேச அரசியல், பொருளாதார செயற்பாடுகள்

உள்ளூர் மக்கள் ஒரு புரிந்துணர்வின் கீழ் அவர்களின் அடையாளத்தைத் திரட்டுவதற்கு சவாலாக விளங்குகின்றன. உள்ளூர் மற்றும் மேற்கத்திய வெளிப்பாட்டு வடிவங்களின் சமூகச் செயற்பாடுகளை இந்தப் புரிந்துணர்வு அடிக்கடி ஈடுபடுத்தியுள்ளது.

அதிகளவிலான பண்பாட்டு ரீதியான உற்பத்திகளை மேற்கொண்டு வினையோகம் செய்யும் பண்பாடானது குறைந்தளவு பண்பாட்டு ரீதியான பொருட்களை உற்பத்தி செய்யும் பண்பாட்டை விட அதிகளவில் பாதிக்கப்படும்.

பரவலாக்கச் செயல்முறையானது ஒரு ஒற்றைவழிப் பாதையல்ல. ஐரோப்பிய மரபு சாராத மூலங்களின் மூலம் ஐரோப்பிய அமெரிக்கப் பண்பாடு பரந்தளவில் பாதிக்கப்பட்டுள்ளது. சமகால ஐரோப்பியச் சிந்தனையில் ஆசிய மெய்யியல், சமயம் என்பன செலுத்திய தாக்கத்தினை சமீபத்திய ஆண்டுகளில் அறிஞர்கள் பரந்தளவிலான கிழக்கு/மேற்கு கோட்பாடுகளின் கலவையாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் குறித்தளவிலான இந்தப் பாதிப்புக்கள் பண்பாடுகளுக்கிடையே சமமான தாக்கத்தை ஏற்படுத்தாது என்னும் உணர்வினை ஏற்படுத்துகின்றது. இதற்கான காரணம் பண்பாட்டுப் பரவலாக்கம் ஒரு பொருளாதார ரீதியான அளவிலேயே தங்கியுள்ளது. அதிகளவிலான பண்பாட்டுரீதியான உற்பத்திகளை மேற்கொண்டு வினியோகம் செய்யும் பண்பாடானது குறைந்தளவு பண்பாட்டுரீதியான பொருட்களை உற்பத்தி செய்யும் பண்பாட்டைவிட அதிகளவில் பாதிக்கப்படும். கலை மற்றும் பண்பாடுகளுக்கு இடையிலான தொடர்பானது உலக பொருளாதார விடயத்துடன் தொடர்புடையது. சமநிலைப்படுத்தப்பட்ட அதிகாரமானது வளர்ந்து வரும் பண்பாட்டு மாற்றீட்டு முறைமையையே சுட்டிக்காட்டுகின்றது. இது தேசிய அரசியலில் சார்ந்திருப்பதைவிட உலக பொருளாதாரத்தையே சார்ந்திருக்கின்றது. இதற்கான உதாரணமாக நாம் ஒரு கலைப் புத்தகத்தினை பதிப்பிக்கும் நிறுவனத்தைக் குறிப்பிடலாம். இதுவரை கலை பற்றிய அதிகளவான புத்தகங்கள் மேலைத்தேச கலையில் காணப்படும் பிரபல்யமான கலைஞர்கள் மற்றும் மேற்கத்திய கலை வரலாறு என்பவற்றை மையமாகக் கொண்டே வெளியிடப்படுகின்றன. வான்கோவினைப் (van Gogh) பற்றிய புத்தகமானது அமெரிக்கா, ஐரோப்பா, யப்பான் மற்றும் பல நாடுகளில் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இவ்வாறான புத்தகங்களுடன் ஒப்பிடும் போது வடஅமெரிக்கா, இந்தோனேசியா, யப்பான் போன்ற நாடுகளில் காணப்படும் சிறந்த கலைஞர்களின் புத்தகங்களை காண்பது அரிதாகும். வாசகர்களுக்கு ஐரோப்பிய கலை அல்லாத கலை பற்றிய அனுபவங்கள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே கிடைக்கின்றன. அந்த அநீதியான தன்மைக்கு புத்தகத்தை வெளியிடுபவர்களின் இலாபத்தை உழைக்கும் ஆர்வமே காரணமாகும். நன்கு அறியப்பட்ட கலைஞர்கள், கலைப்போக்குகளை சார்ந்திருக்கும் பண்பாட்டுநிலை உலக பொருளாதார செயற்தொடரின் பாதிப்பாலேயே ஏற்பட்டுள்ளது. ஐரோப்பியர் அல்லாத கலைகள் மற்றும்

வடிவமைப்புக்கள் பற்றிய அறிவுப் பரம்பலை ஐக்கிய அமெரிக்காவின் தேசிய முற்சாய்வு[8] (National Insularity) கருத்துக்கள் தடுக்க முயற்சிக்கலாம். இதற்கு மிகவும் அடிப்படையான பிரச்சினையாக பண்பாட்டிற்கும் பொருளாதாரத்திற்கும் இடையிலான மாறுபடும் தொடர்பைக் குறிப்பிடலாம். தேசிய முற்சாய்வுக் கொள்கையின் தன்மை ஏனைய பண்பாட்டில் காணப்படும் நல்ல விடயங்களைப் படிப்படியாக அரித்து அழித்துவிடும்.

இக்கட்டத்தில் பண்பாடு என்னும் பதத்தின் அர்த்தமானது பண்பாட்டு பரவல் மற்றும் உலகப் பொருளாதாரம் என்னும் கருத்தாடலை நோக்கி மாற்றீடு செய்யப்படுகின்றது. உலக நோக்கு, வாழ்க்கைப் பழக்கங்கள் என்பவற்றின் மூலம் ஒரு குழுவானது இன்னொரு குழுவில் இருந்து வேறுபடுகின்றது. இந்நிலையில் இவ்விவாதமானது எப்படியிருப்பினும் பண்பாட்டிற்கான புதிய கருத்தொன்று இங்கு மேற்கிளம்புகின்றது. அது என்னவெனில், பல்வேறு நாடுகளுடன் தொடர்பு கொள்வதாகும் (Transnational). விரும்பியோ விரும்பாமலோ கலை மற்றும் வடிவங்கள் முந்திய பண்பாட்டு எல்லைகளின் அழிவுடன் தொடர்புடையதாகவும் பல்வேறு நாடுகளுடன் தொடர்புடைய பண்பாட்டுருவாக்கத்தில் ஒரு பகுதியா கவும் காணப்படுகின்றன. இப்பண்பாடு பற்றிய புதிய புரிந்துணர்வானது உலகளாவிய ரீதியில் இரு வழிகளைக் கொண்டது. அவை,

விரும்பியோ விரும்பாமலோ கலை மற்றும் வடிவங்கள் முந்திய பண்பாட்டு எல்லைகளின் அழிவுடன் தொடர்புடைய தாகவும் பல்வேறு நாடுகளுடன் தொடர்புடைய பண்பாட்டுரு வாக்கத்தில் ஒரு பகுதியாகவும் காணப் படுகின்றது.

1. உலகளாவிய ரீதியில் அரசியல், பொருளாதார செயற் றொடரின் பிரதிபலிப்பு
2. இந்த உலகளாவிய போக்கிற்கு எதிரான வடிவம் என்பனவாகும்.

கலைகூட நிறுவனங்களினதும் சர்வதேச முதலாளித்துவத்தினதும் போக்கை எதிர்ப்பதற்கு சர்வதேச ரீதியான அங்கிகாரத்தை எதிர்த்தல் செயற்பாட்டினூடாகப் பெறவேண்டும். நவீன கலையானது பயனுள்ளதாக அமைய தனிப்பட்ட விருப்புக்களின் பிரதிபலிப்பாக இருக்கக்கூடாது. உள்ளூர் அனுபவத்தின் மூலம் குறிப்பிட்ட அளவு உள்ளூர் பண்பாட்டின் ஊடாக வேரூன்றி நிற்கலாம். ஒரு குழுமத்தின் சமகால கலைச் செயற்பாட்டுடன் தொடர்பான உள்ளூர் கலை உதாரணங்களூடாக உலகளாவிய கலை விமர்சனக் குழுமத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்படலாம். அவர்களுடைய கலைத்துவ வெளியீடுகள் தந்திரோபாய ஊடகம், காணொளி, ஒருங்கிணைப்புக் கலை, மற்றும் நூல்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். இவை அகன்றளவிலான சமூக விடயங்களைக்

8. எங்கள் கருத்துக்களை உயர்வாக மதித்தலும் மற்றவர்களுடைய கருத்துக்களை குறைவாக மதிப்பிடலும் தேசிய முற்சாய்வுக் கருத்தியலாகும்.

குறிப்பிடும். இவை சாதாரண மக்கள் ஆயுதங்களாகப் பயன்படுத்தும் சமகால உளவியல் ரீதியான சுகாதாரச் செயற்பாடுகள், குறியியல் பற்றிய சமூக விமர்சனம் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும்.

பண்பாடுகளுக்கு இடையேயான (Interculture) உலகச் செயற் பாட்டின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொள்ள முற்படும் ஒருவர் எவ்வாறு உள்ளூர் பாரம்பரியத்தின் அடிப்படையினை உருவாக்க முடியும்? சமகாலக் கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் பாவனையில் உள்ள பண்பாட்டுப் பொருட்களை இரவல் வாங்கி தங்களுக்கான மீள்விடயமாக்குவதனை இதற்கான ஒரு தந்திரோ பாயமாக கருதுகின்றனர்.

பொருத்தமற்ற முறையில் தனதாக்கிக் கொள்ளல் என்னும் செயற்பாடானது உற்பத்தியினை குறிப்பிட்ட சிந்தனை யோட்டத்திற்கு மாற்றுகின்றது. பொருத்தமற்ற முறையில் தனதாக்கிக் கொள்ளப்பட்ட உற்பத்திகள் உண்மையான விடயத்தில் கொண்டிருந்த அர்த்தத்தை தக்கவைத்துக் கொள்ளாது.

பொருத்தமற்ற முறையில் தனதாக்கிக்கொள்ளப்பட்ட (Appropriated) பண்பாட்டு உற்பத்திகள் சில வேளைகளில் மேற்கத்திய கலை வரலாறு, திரள் ஊடகம் (Mass Media) அல்லது மேற்கத்தியப் பண்பாடுகளில் இருந்து வந்திருக்கலாம். ஆனால் பொருத்தமற்ற முறையில் தனதாக்கிக் கொள்ளல் என்னும் செயற்பாடானது உற்பத்தியினை குறிப்பிட்ட சிந்தனையோட்டத்திற்கு மாற்றுகின்றது. பொருத்தமற்ற முறையில் தனதாக்கிக் கொள்ளப்பட்ட உற்பத்திகள் உண்மையான விடயத்தில் கொண்டிருந்த அர்த்தத்தை தக்கவைத்துக் கொள்ளாது. பொருத்தமற்ற முறையில் தனதாக்கிக் கொள்ளல் என்னும் தந்திரோபாய நோக்கானது உற்பத்தி மற்றும் நுகர்வின் மீதான அடாவடித்தனமான கவனத்தை ஈர்ப்பதாகவும் பண்பாட்டிற்கு இடையிலான தொடர்பினை கட்டுப்படுத்துவதாகவும் அமைகிறது. இதனால் பொருத்தமற்ற முறையில் தனதாக்கிக் கொள்ளும் செயற்பாட்டில் வரையறைப்படுத்தல் என்னும் பண்பானது பொருளாதாரச் செயற்பாட்டின் ஊடாக பண்பாட்டு உற்பத்தியில் உளவியல் ரீதியான இடைவெளியினை ஏற்படுத்துகின்றது.

தவறான முறையில் தனதாக்கிக் கொள்ளலானது குறிப்பிட்ட காலத்திற்கே காணப்படுவதால் இது பாதுகாப்பானது என்னும் ஒரு கருத்தும் நிலவுகின்றது. ஏனெனில் பெருமளவில் இந்த முறையில் புதிய தொழில்நுட்ப தந்திரோபாய விதிகளை ஏற்படுத்தலாம் என நம்பப்படுகிறது. பொருட்பண்பாட்டின் உலகமயமாக்கல் செயற்பாடானது தவறான முறையில் தக்கவைத்துக் கொள்ளலை எதிர்ப்பது சாத்திய மற்றது என்பதனை இதன் ஊடாக கணித்துக் கொள்ளமுடியும். ஏனெனில் பண்பாட்டு உற்பத்தியின் உறவுநிலைகூட நெருக்கமற்ற தாகவே காணப்படுகின்றது. பண்பாட்டு உற்பத்திகளுக்கான பணியானது (கலைஞர், வடிவமைப்பாளர்) பண்பாட்டு இணைப்பின் விடயமான உலகமயமாக்கல் ஆசையினை மறுசீரமைக்கின்றது. வெற்றாக உள்ள பண்பாட்டுப் பாரம்பரியத்தின் தாக்கம் முற்றிலுமான பொருளாதாரத் தேவையையே அடிப்படையாகக் கொண்டது.

இந்நிலையில் பண்பாடுகளுக்கு இடையேயான (Interculture) ஊடாட்டம் தவிர்க்கமுடியாத விளைவா அல்லது வளர்ந்துவரும் கலை மற்றும் பண்பாட்டுத் தொடர்பிற்கான மறுசீரமைப்பா என்பதை சிந்திக்கத் தூண்டுகின்றது.

## முடிவாக

கலை, பண்பாடு என்பவற்றுக்கிடையேயான தொடர்பினை வரையறுக்க பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. பண்பாட்டின் கூறுகளையும் இக்கூறுகளுக்கு இடையேயான தொடர்பினையும் ஆராந்து பார்க்கக் கூடியதாகவிருந்தது. அழகியலின் வேறுபட்ட கூறுகள் ஒன்று சேர்ந்து தொடர்புபட்டதொரு அமைப்பாக மாறுகின்றன. அழகியல் அமைப்பு ஏனைய பண்பாட்டு அமைப்புக்களுடன் தொடர்புபடுகின்றது. உதாரணமாக அரசியல், பொருளாதாரம், குடும்ப உறவுகளின் அமைப்பு போன்றவற்றின் மூலம் ஒரு மொத்த பண்பாட்டு முழுமை யினை உருவாக்குகின்றது. பண்பாட்டிற்கான இரண்டாவது விளக்க மானது கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டிய பெறுமானங்களாகும். பண்பாடு என்பது சில வேளைகளில் பெற்றுக்கொள்ளுதல் அல்லது தொடர்ந்து பேணுதல் என்னும் செயற்பாடாக அமைகின்றது.

பெறுமானமானது விடயத்துடன் தொடர்புடையது என பண்பாட்டுச் சார்புவாதம் குறிப்பிடுகின்றது. அழகியல் தீர்ப்புக்களில் காணப்படும் பண்பாட்டுக் கலப்பு வேறுபாடுகளை விபரிப்பதற்கு சார்புவாதம் மிகப்பொருத்தமான ஒன்றாகவே காணப்படுகின்றது. ஒரு உலகளாவிய அணுகுமுறை குறிப்பிட்டளவான பெறுமானத்தைக் கொண்டுள்ளது. அழகியல் தீர்மானங்கள் எல்லா வகையான அழகியல் வெளிப் பாட்டினதும் பகுதியாகும் என வலியுறுத்தப்படுகின்றது. சர்வதேசத்துவம் அழகியல் தீர்மானத்தில் காணப்படும் பண்பாட்டுக் கலப்பை விளக்குவதற்கான சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது. ஒன்று இன்னொன்றின் வெளித்தோற்றத்தைத் தடைசெய்வதற்கு மாறாக மிகப் பொருத்தமான மற்றும் தொடர்புடைய இரு முனைகளுக்கு இடையே நாம் வாழ்வதும் சிந்திப்பது மாகும். மற்றையவர்களை அறிந்து கொள்வதற்கும் மதிப்பிடுவதற்கும் ஒவ்வொரு முனையும் எமக்கு உதவுகின்றன. மக்கள் ஏனைய பண்பாடுகளில் காணப்படும் கலைகளில் இருந்து அழகியல் தீர்மானங்களை மேற்கொள்வதே அழகியல் பொதுமைத் தன்மை பற்றிய நிலையில் சார்புடையதாக எமது மனதினைத் திறந்து வைத்திருப்பதற்கான காரணமாகும்.

மக்கள் ஏனைய பண்பாடுகளில் காணப்படும் கலைகளில் இருந்து அழகியல் தீர்மானங்களை மேற்கொள்வதே அழகியல் பொதுமை தன்மை பற்றிய நிலையில் சார்புடையதாக எமது மனதினைத் திறந்து வைத்திருப் பதற்கான காரணமாகும்.

மற்றவர்களின் பண்பாடுகளில் காணப்படும் பெறுமானங்களைக் கற்பதன் மூலம் பிரதிபலிக்கும் பெறுமானம் அவர்களின் விடயங்களைக் அறிந்துகொள்வதற்கு உதவுகின்றது. பண்பாட்டுக் கலப்பு ஆய்வில் பிரதிபலித்தல் ஒப்பீட்டுரீதியான ஆய்வைவிட முக்கியமானதாகும்.

ஒரு பண்பாட்டை ஆய்வு செய்யும்போது அது ஒருவர் தன்னுடைய பண்பாட்டை புரிந்துகொள்வதில் பிரதிபலிப்பை ஏற்படுத்துகின்றது. பிரதிபலிப்பு அணுகுமுறை ஒருவர் அழகியல் வெளிப்பாடு என்று கருதும் கருத்தை விருத்தி செய்வதற்கு உதவுகின்றது. ஏனென்றால் பரந்தளவான நடவடிக்கைகள் ஏனைய பண்பாடுகளின் அழகியல் வெளிப்பாடு வாய்ந்தனவாக இருக்கும். இது அவர்களின் பண்பாட்டில் சில விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் போதுமானதாக இருக்கும். ஏனென்றால் ஏனைய பண்பாடுகளில் காணப்படும் பரந்தளவிலான அழகியல் நடைமுறைகள் தங்களினுடைய பண்பாட்டினுள் பரந்தளவிலானதாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

கலப்பாக்கம் என்னும் சொல்லானது இயல்பான பண்பாடு களுக்கு இடையிலான செயற்பாட்டினை மாற்றுதல் எனச் சுட்டிக்காட்டப் படுகின்றது. கலப்பாக்கம் என்பது பண்பாட்டுப் பரவல் என்னும் பரந்த செயற்பாடாகக் கருதப்படுகின்றது.

கலப்பாக்கம் என்னும் சொல்லானது இயல்பான பண்பாடுகளுக்கு இடையிலான செயற்பாட்டினை மாற்றுதல் எனச் சுட்டிக்காட்டப் படுகின்றது. கலப்பாக்கம் என்பது பண்பாட்டுப் பரவல் என்னும் பரந்த செயற்பாடாகக் கருதப்படுகின்றது. இது இணைப்பு, ஒருங்கிணைப்பு ஒருமைப்பாடு என்பவற்றினை உண்டாக்கியுள்ளது. இதில் இறுதியாகக் காணப்படுவது ஒன்றுக்கு மேற்பட்ட பண்பாட்டுப் பாரம்பரியங்களின் தொகுப்பினை ஏற்படுத்தியுள்ள தாகும். சில வேளைகளில் கலப்பாக்கமானது பண்பாட்டு ஓரின வாக்கம் என்னும் கருத்தைக் கொண்டுள்ளது. இது சிலவேளைகளில் மேற்கத்திய மயமாதல், அமெரிக்கமயமாதல், உலகமயமாதல் என்பவற்றைச் சுட்டிக்காட்டலாம். கலப்பாக்கமானது பரஸ்பரம் தொடர்பிலிருந்து உருவான உத்தியாகக் கருதுப்படுகின்றது. பண்பாடுகளுக்கு இடையிலான தொடர்புடைய செயற்பாடுகளின் மூல மாதிரிகளை வேறுபடுத்திப் பார்ப்பதற்கான ஒரு வழியாக கலப்பாக்கம் காணப் படுகின்றது. கலப்பாக்கமானது தொடர்புடைய தொரு கருத்தாகவே மேற்கிளம்புகின்றது. ஏனெனில், கலை பண்பாட்டிற்கு இடையிலான தொடர்பு உலக பொருளாதார விடயத்துடன் இப்போதும் தொடர்பு படுகின்றது. பண்பாடு நாடுகடந்த ஓர் அர்த்தத்தைக் கொண்டுள்ளது. கலையானது உள்ளூர் பண்பாடுகளுடன் இனிப்பிணைக்கப்பட முடியாதநிலை காணப்படுகின்றது. ஏனெனில் கிட்டத்தட்ட அனைத்துக் கலைகளும் ஒரு வடிவத்தில் இருந்து இன்னொரு வடிவத்திற்கு ஏற்றுமதி செய்யப்படக்கூடியவை. பண்பாடுகளுக்கிடையிலான தொடர்பே எமது காலத்தின் பண்பாடாகும்.

கலை பண்பாட்டிற்கு இடையிலான தொடர்பு உலக பொருளாதார விடயத்துடன் இப்போதும் தொடர்பு படுகின்றது.

## References

Kasfir, Sidney.Littleld., (2014), Contemporary African Art, Thames & Hudson World of Art, London, High Holborn.

Leuthold, Steven, M., (2011), Cross-Cultural Issues in Art: Frame for Understanding, New york: Routledge.

Morphy, Howard., (2007), Becoming Art : Exploring Cross – Cultural Categories, New York: Berg, Oxford.

Morphy, Howard., (2013), Aboriginal Art, London: Phaidon Press Limited, Regent's Wharf.

Seligmann, C.G.,(1911), The Veddas, Cambridge, University Press.

Sen, Soumen,. (2003), Khasi Jaintia Folklore : Context, Discourse and History, Chennai: National Folklore Suppor Centre.

Wickramasinhe, Martin., (1977), Sinhala Language and Culture, Colombo, Dehiwala: Tisara Prakasakayo Ltd.